பக்கங்கள் 17+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 28 வெள்ளிக்கிழமை 13.09.2024 | அதிர்வு 43

## பிரேமதாஸவின் மகனிடம் நாட்டைக் கையளியுங்கள்

### சஜித் வேண்டுகோள்



முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வின் மகனிடம் நாட்டைக் கையளியுங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி துண்டுப்பிரசாரம்:


## கஜேந்திரன் எம்.பி. கைதாகி விடுதலை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செய லாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார். 04



# அநுர கொலையாளி ரணில் ஜனநாயகவாதி

## இருவரில் எவர் வேண்டும் என்பதை 21 ஆம் திகதி மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்கிறார் பிரதமர்



“மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க கொலையாளி. ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க ஜன நாயகவாதி. இருவரில் எவர் வேண்டும் என்பதை எதிர்வரும் 21ஆம் திகதி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். தவ றியேனும் அநுரகுமார ஆட் சிக்கு வந்தால் நாட்டில் மீண் டும் இரத்த ஆறுதான் ஓடும்.”

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். 04

# பிரேமதாஸ உயிருடன் இருந்திருந்தால் ரணிலுக்கே ஆதரவு வழங்கியிருப்பார்

### முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவிப்பு




முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இப்போது உயிருடன் இருந் திருந்தார் என்றால் அவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளித்தி ருப்பார் என்று முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

கெஸ்பேவவில் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் ‘ரணிலால் முடியும்’ வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடை பெற்றது. இதில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே 04

# சகல முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

## முஸ்லிம் இடதுசாரி முன்னணி அறிவிப்பு





இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு என்று முஸ்லிம் இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளர் எம்.ஆர்.எம். பைசால் தெரிவித்தார்.

கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்றைய காலகட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம், பேர்கர் என அனைத்து இனங்களையும் சேர்ந்த மக்கள் எமது நாட்டில் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். ஏனெனில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை நெருக்கடியில் இருந்து வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் எமது மக்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற கனவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணுகின்றார். கொழும்பு பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம், பேர்கர் மக்களைப் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களும் வாழ வேண்டும் என்பதே அவரின் எண்ணமாகும்.

தற்போது அனைத்து முஸ்லிம் அமைப்புகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றன என்றே கூற வேண்டும்.” – என்றார்.

# வடக்கு சென்று வாக்குக் கேட்கும் உரிமை ஜே.வி.பிக்குக் கிடையாது!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



“இலங்கை – இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாண சபை முறைமைக்கு எதிராக அன்று போர்க்கொடி தூக்கிய ஜே.வி.பியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்குக் கேட்பதற்குரிய உரிமை கிடையாது. ஆனால், எமக்கு அதற்குரிய உரிமை உள்ளது. ஏனெனில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு பயணிக்கும் கட்சிதான் எமது கட்சியாகும்.” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களைக் கொன்ற கட்சிதான் ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டவர்களையும் ஜே.வி.பி. கொன்றது. இந்திய மருத்துகளைக் கொண்டு வந்த அதிகாரிகளையும் இந்தக் கட்சி கொலை செய்தது. இந்தியப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு அழைப்பும் விடுத்தது. எனவே, இந்தக் கட்சியினருக்கு வடக்குக்குச் சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடைக்காது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளைச் செய்யக்கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸதான் என்பதை அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். அதேபோல் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் சஜித்துக்கு பேராதரவு வழங்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். குறித்த பகுதிகளுக்குச் சென்றபோது சஜித்துக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.” – என்றார்.

# வடக்கு, கிழக்கு, மலையகத்தில் சஜித்துக்குத்தான் பெரும் ஆதரவு

## அஜித் பி பெரேரா தெரிவிப்பு





வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் சஜித் பிரேமதாஸவுக்குத்தான் பெருவாரியான ஆதரவு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் முதல் சுற்றிலேயே 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்ககளைப் பெற்று விடுவார்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு இல்லை. ரணிலாலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. அனைத்து இன மக்களின் ஆதரவும் சஜித்துக்குத்தான் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால் 23 அல்லது 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும். இடைக்கால அரசொன்று ஸ்தாபிக்கப்படும். ஆளுநர் பதவிகளில் மாற்றம் செய்யப்படும்.” – என்றார்.

# முதல் பொருளாதாரக் கொலையாளி மக்கள் விடுதலை முன்னணியினரே

## பொதுமக்கள் ஐக்கிய உள்நாட்டுக் கட்சி குற்றச்சாட்டு




“இலங்கையின் முதல் பொருளாதாரக் கொலையாளி மக்கள் விடுதலை முன்னணி ஆகும். அவர்கள் 1989 இல் நாட்டில் ஒரு பயங்கரவாதக் கிளர்ச்சியை உருவாக்கினர். நாட்டின் பொருளாதாரம் முடங்கியது. இளைஞர் சமூகம் கொல்லப்பட்டது.”

– இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய உள்நாட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் இந்திக்க எஸ். ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

கொழும்பு, பிளவர் வீதியிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“தேசிய மக்கள் சக்தியில் இருந்து முன்வந்துள்ளவர் ஜே.வி.பியினால் உருவாக்கப்பட்ட அநுரகுமார திஸநாயக்க என்ற பொம்மை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து முன்னிறுத்தியுள்ள சஜித் பிரேமதாஸ, அரசியல் குடும்பத்தால் வளர்க்கப்பட்டவர் என்றே கூற வேண்டும். அவர்களால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

எனவே, இந்த நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவருக்கே அனைத்து இன மக்களும் எதிர்வரும் 21ஆம் திகதி வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.




# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நவம்பர் 25 இல் ஆரம்பம்

2024ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அநுர கொலையாளி...

கெஸ்பேவவில் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் ஆதரவைக் கோரியுள்ளார். மக்களும் பெருமளவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் நம்பிக்கையை ஜனாதிபதி உறுதி செய்திருக்கின்றார்.

இதுவரையில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே முன்மொழிந்திருக்கின்றார். நாட்டின் கல்வித்துறைக்கும் கல்வியல் கல்லூரி போன்ற விடயங்களை அவர் அறிமுகப்படுத்தினார். இவ்வாறு இலங்கையில் புதுமையான முயற்சிகளை சாத்தியமாக்கிக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும்.

தவறியேனும் இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால் மூன்று எம்.பிக்களை வைத்துக்கொண்டு ஜனநாயக ஆட்சி செய்யும் இயலுமை அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இல்லை. எனவே, அவர் தன்னிச்சையான அதிகாரங்களுடன் செயற்பட முயற்சிப்பார். ஆகவே, நாட்டில் ஆட்சி அதிகாரத்தைச் செயற்படுத்தக்கூடிய நாடாளுமன்ற அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது.

இம்முறை பெருமளவான புதிய வாக்காளர்கள் பதிவாகியிருக்கும் நிலையில் நாட்டின் எதிர்காலத்தைச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்." - என்றார்.

### பிரேமதாஸ...

தலதா அத்துகோரல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்து அமைச்சுப் பதவி வாங்க நான் விரும்பவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமக்கு அரசியல் கற்பித்தார். இன்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பலர் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகொள்ள முடியுமா என்ற சந்தேகத்துடன் இருக்கின்றார்கள். நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எமது தலைவராவார்.

ரணசிங்க பிரேமதாஸ இப்போது உயிருடன் இருந்திருந்தார் என்றால் அவரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளித்திருப்பார். அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அவரைப் பாதுகாத்தார். எனவே, பிரேமதாஸவின் குடும்பத்தார் நன்றி மறந்தாலும் அவர் உயிரோடு இருந்திருந்தால் நன்றிக்கடன் செலுத்தியிருப்பார்.

எனவே, பொருளாதார நெருக்கடியால் கஷ்டப்பட்ட மக்களும் அந்தக் கஷ்டங்களுக்கு முடிவு கட்டிய தலைவரான ஜனாதிபதி ரணிலை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும்." - என்றார்.

### பிரேமதாஸவின்...

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தனது ஆட்சியில் தேயிலை தொழில் துறையின் பொற்காலம் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பத்தேகம பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அச்சமின்றி, இந்த நாட்டின் எதிர்காலத்தைப் பிரேமதாஸவின் மகனிடமும், இந்த அணியிடமும் ஒப்படைக்கவும். நாட்டுக்குத் தற்காலிக பொறுப்பைக் கொடுங்கள். வளர்ச்சியடைந்த சகாப்தத்தை உருவாக்குவோம்." - என்றார்.

### கஜேந்திரன் எம்.பி.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்றும், தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் கஜேந்திரன் எம்.பி., இன்று கிளிநொச்சியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளார்.

இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது தேர்தல் சட்டத்துக்கு முரணானது என்ற காரணியின் கீழ் செல்வராசா கஜேந்திரன் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கனடாவில் கூட்டம்

ஒன்றாரியோ,செப்ரம்பர் 13

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கூட்டம் ஒன்று கனடாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழ் மக்களின் ஒற்றுமையை ஒரு சக்தியாக இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் காண்பிப்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறேன் என தமிழ் பொதுவேட்பாளராக களமிறங்கியுள்ள பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இவருக்கு ஆதரவான கூட்டம் ஒன்றை தமிழ் பொது வேட்பாளரின் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் மண்டபத்தில் இது நடைபெற ஏற்பாடாகியுள்ளது.





# வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலிலுள்ள அன்னதான மடங்களுக்கு உணவுப் பொருள்

## சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கி வருகிறது

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட் டு முன்னிட்டு, அங்கு திரளும் பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவென ஆலய சூழலில் உள்ள மூன்று அன்னதான மடங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அன்னதானத்துக்கு வேண்டிய அரிசி மரக்கறி வகைகள் மற்றும் சமையலுக்கு வேண்டிய பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்ற தினத்தன்று முதற்கட்டமாக ஒரு தொகுதி அரிசி மரக்கறிவகைகள் மற்றும் பொருள்கள் ஆலய சுற்றாடலில் உள்ள பெரியாழ்வார் அன்னதான மடம், ஆதிமூல லஷ்சுமி ஈசான அன்னதான மடம், பரந்தாமன் ஆச்சிரமம் ஆகிய மூன்று அன்னதான மடங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன

தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை இரண்டாம் கட்டமாக இதே அன்னதான மடங்களுக்கு அன்னதானப் பொருள்களாக 1500 கிலோ அரிசி, 225 கிலோ பருப்பு, 150 கிலோ சீனி, 60 லீற்றர் மரக்கறி எண்ணை, 75 கிலோ உள்ளி, 15 கிலோ அப்பளம், 50 கிலோ சோயா, 250 தேங்காய் மற்றும் மரக்கறி வகைகள் என்பன சந்நிதியான் ஆச்சிரமத்தால் கையளிக்கப்பட்டன.

அடுத்துவரும் தினங்களில் இதே அன்னதான மடங்களுக்கு மூன்றாம் கட்டமாக மேலும் ஒரு தொகுதி அன்னதானத்துக்கான பொருள்கள் வழங்கவுள்ளன என்று சந்நிதியான் ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது தொடர்கதை!

திருடனைத் தலையாரியாக்கி, திருட்டை விசாரிக்கும் பொறுப்பையும் அவனிடமே கொடுத்தால் நிலைமை என்னவாகும்?

இலங்கை விவகாரத்தை ஒட்டி அந்தப் பயனற்ற வேலையை மீண்டும் வழமை போல செய்திருக்கின்றார் மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர்.

இலங்கையில் போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை வழங்கும் பொறுப்பு மீண்டும் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் தலையீட்டை தமிழர்கள் கோரிவருகின்ற நிலையில், நீதி வழங்கும் பொறுப்பு புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள இலங்கை அரசாங்கத்திடமே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் சர்வதேச தலையீட்டிற்கான கோரிக்கையை தொடர்ந்து நிராகரிக்கும் இலங்கை அரசு இந்த விடயத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்கு உள்நாட்டு பொறிமுறை மூலமே கையாளத் தம்மால் முடியும் எனக் கூறி வருகிறது. ஆனால் அதுவும் நடப்பதாக இல்லை.

இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழல் தொடர்பில், வாய்மொழியாக அளித்த அறிக்கை ஒன்றில், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குவதற்கான பொறுப்பை அடுத்து வரும் புதிய ஆட்சியாளரிடம் கையளிக்கின்றார் என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதுவரை கொடுக்கப்பட்டு நிறைவேற் றப்படாத உறுதிப்பாடுகளை செயல்படுத்தும் பொறுப்பை, இன்னும் சில நாள்களில் ஆட்சிக்கு வரவுள்ள புதிய ஜனாதிபதியிடம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையாளர் ஒப்படைத்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் சமர்ப்பித்த தனது அறிக்கையில், முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அந்த பேரவைக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்பதை புதிதாக ஆட்சிக்கு வரவுள்ள அரசாங்கத்திற்கு அவர் நினைவூட்டினார்.

"இலங்கையில் ஜனாதிபதி தேர்தலும், அதையடுத்து இந்த ஆண்டின் பிற்பகுதியில் நாடாளுமன்ற தேர்தலும் நடைபெறவுள்ளன. இதையடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் பொறுப்புக்கூறல், நீதி வழங்குவது மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு உறுதியளிக்கும் அதேவேளை அதை நோக்கிய இடைக்கால மாற்றங்களுக்கு தாங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்" - என்று வழமையான பல்லவியை இந்த ஆணையாளரும் பாடியிருக்கின்றார். அவ்வளவுதான்.

இரண்டு, மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தீர்மானம் காலாவதியாக ஒரு புதிய பிரேரணை கொண்டுவரப்பட்டு ஒரு புதிய தீர்மானம் நிறைவேற்றப்படும். இது 15 வருடங்களாத் தொடரும் திருவிழா.

இலங்கையிலும் நான்கு, ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதி தேர்தலும் பொது தேர்தலும் நடத்தப்படும். சில சமயங்களில் நாடாளுமன்றத் தேர்தல் முற்கூட்டியும் நடக்கலாம். இருக்கும் ஜனாதிபதி இடையில் தப்பி ஓடினால் புதிய ஜனாதிபதி வருவார் - ரணில் விக்ரமசிங்க போல.

ஒவ்வொரு முறையும் ஜெனிவாவில் தீர்மானத்துக்குரிய பிரேரணை வரும் போதும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை நிலைவரம் தொடர்பில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு தடவையும் ஏதோ ஒரு அரசோ ஜனாதிபதியோ புதிதாக பதவியேற்கும் அல்லது பதவியேற்றிருக்கும் நிலைமை இருக்கும். அவரிடம் அல்லது அந்த அரசிடம் பொறுப்பை ஒப்படைக்கின்றோம் என்று கூறி ஆணையாளர் விவகாரத்தை சமாளித்து விடலாம். இது தான் தொடர் கதையாகத் தொடரப் போகின்றது.



# வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை!

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக 2024 ஆம் ஆண்டு செம்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இந்த தேர்தலுக் காக 40 வேட் பாளர்கள் கட்டுப்பணம் செலுத்திய போதும், தேர்தல் விதிமுறைகளை மீறியமை காரணத்தால் ஒரு வேட்பாளர் நிராகரிக்கப்பட்டு தற்போது 39 வேட்பாளர்கள் பேட்டியிடிகின்றனர்.

இந்த வருடத் தேர்தல் களமானது இலங்கை வரலாற்றில் அதிகளவிலான வேட்பாளர்கள் ஜனாதிபதி பதவிக்காக பேட்டியிடும் தேர்தல்களமாக பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் இலங்கை வரலாற்றில் இதுவரை நடைபெற்ற 8 ஜனாதிபதி தேர்தல்களும் முறையே 1982 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவதாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது 06 வேட்பாளர்களும், 1988 ஆம் ஆண்டு 03 வேட்பாளர்களும், 1994 ஆம் ஆண்டு 06 வேட்பாளர்களும், 1999 ஆம் ஆண்டு 13 வேட்பாளர்களும், 2005 ஆம் ஆண்டு 22 வேட்பாளர்களும், 2019 ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது 35 வேட்பாளர்களும் போட்டியிட்ட நிலையில் இந்த வருடம் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைகளை விட அதிகமான வேட்பாளர்கள், ஜனாதிபதியின் பதவிக்காக போட்டியிடுகின்றனர்.

இலங்கையில், 1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அங்கீரகிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுக்கு, 50 ஆயிரம் ரூபா கட்டுப் பணமாகவும், சுயேட்சை வேட்பாளர்களுக்கு 75 ஆயிரம் ரூபா கட்டுப் பணமாகவும் அறவிடப்படுகின்றது.

இந்த நிலையில் – இரண்டு கோடி 20 லட்சம் சனத்தொகையை கொண்ட எமது நாட்டில் 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு கோடி 71 லட்சத்து 80 ஆயிரம் பேர் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஜனாபதி தேர்தலுக்கான வர்த்தமானி வெளியாகியமைத் தொடர்ந்து, அத்தினத்தில் இருந்து 10 நாள்களுக்குள் தபால் மூலமாக வாக்களிப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் கோரப்பட்டன.

அதற்காக கடந்த ஓகஸ்ட் 05 ஆம் திகதி வரை 7 லட்சத்து 36 ஆயிரத்து 589 பேர் விண்ணப்பித்துள்ள நிலையில் அவர்களில் 7 லட்சத்து 12 ஆயிரத்து 321 பேர் தபால் மூலமாக வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர். இத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களில், 24,260 பேரின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

தபால் மூலமாக வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் வாக்களிப்பதற்கு 4,5,6 ஆம் திகதிகளில் இடம்பெற்றுள்ளன.

எமது நாட்டில் பணியாற்றும் அரச ஊழியர்களும், தேர்தல் கடமைகளில் பணியாற்றவுள்ளவர்களும் தபால் மூலமான வாக்களிப்புக்கு விண்ணப்பித்துள்ள நிலையில், அதிகளவிலான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள வருடமாகவும் இவ்வருடம் கருதப்படுகின்றது.

அரச பதவிகளில் இருக்கும் அதிகாரிகளுக்கே இவ்வாறான நிராகரிப்புக்கள் ஏற்படுகின்றது என்றால், வாக்களிப்பதற்காகக் காத்திருக்கின்ற வாக்காளர்களுக்கும் பல சவால்கள் காணப்படுகின்றன என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைமுறைகளும் மக்களுக்குச் சற்று புதிய விடயமாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் இந்த வருட ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு முறையானது – விருப்பு வாக்களிப்பு முறைமையை அடிப்படையாகக் கொண்டே அமையப் பெறுகின்றது. அவ்வாறு பார்க்கின்ற போது பின்வரும் மூன்று வழிமுறை

தொடர்ச்சி ▼

# வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை!



தொடர்ச்சி▲

களின் ஊடாக மக்கள் தமது விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

வழிமுறை 1 – வாக்காளர் யாதேனும் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பின், அவரின் பெயருக்கு நேராக எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் 1 என இலக்கமிட முடியும்.

வழிமுறை 2 – இருவருக்கு வாக்களிக்க விரும்பின், வாக்காளர் ஒருவர்

தான் விரும்பிய வேட்பாளரின் பெயருக்கு நேரே எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகே உள்ள பெட்டியில் 1 எனவும், இன்னொருவருக்கு 2 எனவும் இலக்கமிட்டு இரண்டு வாக்காளர்களுக்கு வாக்களிக்க முடியும்.

வழிமுறை 3 – மூன்று நபர்களுக்கு வாக்களிக்க விரும்பின், வாக்காளர் தான் விரும்பிய ஒருவரின் பெயருக்கு நேரே எதிரில் உள்ள சின்னத்துக்கு அருகில் உள்ள பெட்டியில் தனது விருப்பத் தெரிவுக்கு ஏற்ப விருப்பத்தின் அடிப்படையில் 1 எனவும், இன்னொருவருக்கு 2 எனவும், மற்றுமொருவருக்கு 3 எனவும் இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வாக்களிக்க முடியும்.

தேர்தலில் வாக்களிக்கும் போது வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டிய மிக முக்கிய விடயமாக, தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிக்க விரும்பினால் 1 என இலக்கமிடவும் முடியும்.

ஒன்றுக்கு மேற்ப்பட்டவர்களுக்கு வாக்களிக்க விரும்பின் இலக்கங்களை மாத்திரம் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கும் போது இலக்கங்களும், ஆங்கில எழுத்துக்களும் இணைந்த வகையில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் நிராகரிக்கப்படும் என்பதனை கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவாக வேண்டும் எனின், செலுத்தப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50 வீதத்துடன் ஒரு வீத வாக்கு அதிகம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின், தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டாவது வாக்கெண்ணும் முறையினை பின்பற்றும்.

தபால் மூலமாக வாக்களிக்கும் வாக்காளர்களைள தவிர்ந்த ஏனைய

வாக்காளர்கள் செம்ரெம்பர் 21 ஆம் திகதி தனது ஜனநாயக கடைமையை நிறைவேற்றும் வகையில் வாக்களித்து அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்தற்கான உரிமையுண்டு.

எமது நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பாராபட்சம் காட்டாது அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளக் கூடிய, மக்களின் தேவைகளை அறிந்து செயற்படக் கூடிய ஒரு நபர் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது. எவருடைய அச்சுறுத்தல்கள் – மிரல்களுக்கும் பயப்படாது, எமக்கு சரியான தலைவரை நாமே தெளிந்த சிந்தையுடன் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

வாக்களிப்பது மக்களின் ஜனநாயகக் கடமை – யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களின் உரிமை.

“உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலை வானேன ?” என்பது போல சரியான தலைவரை தெரிவு செய்வதற்கான வாக்குரிமை எம்மிடம் காணப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டுக்கும் எமக்கும் மிகப்பொருத்தமான தலைவரைத் தெரிந்தெடுப்போம்.

**கனிஸ்ரா ஜெயகாந்தன்,**
*ஊடகக்கற்கைகள் துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*







# மட்டக்களப்பு ஏறாவூரில் விபத்து; ஒருவர் பலி!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னைக்குடா வீதியில் நேற்று வியாழக்கிழமை (12) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஏறாவூர் தளவாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.அஜீத்குமார் (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் சிறிய ரக உழவு இயந்திரத்தில் மோதுண்டதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சடலம் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுப் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து துண்டுப் பிரசுரம் விநியோகம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நாவிதன் வெளி பிரதேசத்தில் பிரச்சார நடவடிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பேராசிரியர் முருகேசு இராஜேஸ்வரன் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன் தலைமையில் இந்தப் பிரசார செயற்பாடு நேற்று நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு சவளக்கடை நாவிதன்வெளி அன்னமலை சொறிக்கல்முனை வீரச்சோலை போன்ற பகுதிகளிலும் நடைபெற்றது.



இதன்போது பாதசாரிகள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்ற பேராசிரியர் முருகேசு ராஜேஸ்வரன், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குமாறு பொது மக்கள் மற்றும் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன் போது அவரின் ஆதரவாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

# மாம்பழ உற்பத்தியில் இரண்டாம் கட்ட வெற்றிபெற்ற மாணவருக்குப் பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

மாம்பழ அறுவடையில் இரண்டாம் கட்டமாக வெற்றி பெறுவதற்கு மாணவர்களின் நல்லொழுக்கமே காரணம் என்று கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா தெரிவித்தார்.

கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு இன்று பாடசாலை அதிபர் அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜிதிய்யா தலைமையில் இரண்டாம் கட்டமாக நடைபெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹ்துல் நஜீம், கௌரவ அதிதியாக வலயக் கணக்காளர் வை . எம். ஹபிபுல்லாஹ், பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது சுமார் 100 இற்கும் அதிகமாக மாம்பழங்கள் அறுவடை இசய்யப்பட்டது. மாணவர்கள் கழிவு நீர் முகாமைத்துவத்தைப் பயன்படுத்தி இந்த அறுவடையையில் வெற்றி பெற்றுள்ளனர் எனட்றும் அதிபர் தெரிவித்தார்.

மாணவர்களின் சுற்றாடல் சார் நடவடிக்கைகள் இந்த அறுவடை செயற்பாட்டில் தங்கி இருந்துள்ளது என்று அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா மேலும் குறிப்பிட்டார்.



# மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலய நிர்மாணத்துக்கு அடிக்கல்

1987 ஆம் ஆண்டு இந்திய ராணுவ நடவடிக்கையால் கைவிடப்பட்டு பராமரிப்பின்றிக் காணப்பட்ட புலோலி, வல்லிபுரம், மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் விழாவும் சங்கு ஸ்தாபனமும் நாளை மறுதினம் (15) ஞாயிற்றுக்கிழமை காலை 9.03 மணி முதல் 10.33 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் இதற்கான அடிக்கல்லை நட்டு வைப்பார் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர்.


குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்கியதற்கு இதுவரை பலனெதுவும் கிடைக்கவில்லை

## ரத்நாயக்க எம்.பி. தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)

ரணில் ஜனாதிபதி ஆவதற்கு அன்று ஒத்துழைப்பு வழங்கியதற்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (12) நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி. ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ஷ பக்கம் நின்றதற்கு காரணம் அவரது தந்தை மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டை காப்பாற்றியதற்கு நன்றி கடன் செலுத்துவதற்காகவே.

ரணில் விக்ரமசிங்கவுடன் சேர்வதற்கு எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது. அன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆவதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கி இருந்தோம். இருந்தும் அந்த ஒத்துழைப்பு வழங்கியதற்கு இணங்க அவரால் நாட்டுக்குப் பெரிதாக ஒன்றும் பலன் இல்லை.

இப்பொழுது மக்கள் சொல்கிறார்கள், வரிசை யுகம் இல்லை. நாடு அபிவிருத்தி அடைந்து செல்கிறது. அதற்குக் காரணம் தலைவர் விக்ரமசிங்க என்று. அவருக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கூறிக்கொள்கின்றனர்.

நான் கேட்கிறேன், வரிசை யுகம் நிறுத்தப்பட்டுள்ளது என கூறினால் – மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காவிட்டால் எவ்வாறு அந்த வரிசை யுகம் வரும் என்பதே எனது கேள்வியாக அமைகிறது.

நான் 30 வருடங்களுக்கு மேலாக அரசியல் செய்து வருகிறேன் பொது மக்கள் எனக்கு வழங்கிய ஆசீர்வாதத்தின் படி அவர்கள் என்னை விரும்பாவிட்டால் நான் வீடு செல்வேன்.

ஆனால் நான் தற்பொழுதும் நாட்டை காப்பாற்றிய மஹிந்த ராஜபக்ஷவுடனும் அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷவுடனுமே உள்ளேன். அதே வேளை தீர்மானம் இல்லாத 40 விதமான மக்கள் காணப்படுகின்றனர்.

அவர்களது வாக்கு எந்த வேட்பாளருக்கு செலுத்தப்பட வேண்டும் என்று இதுவரையில் உறுதி ஆகாத நிலையில், தற்பொழுது எமது வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ செல்கின்ற பாதை மெதுவான கவனமான ஒரு பாதை.

வருகின்ற 22 ஆம் திகதி காலை நேரத்தில் அதற்கான பிரதிபலன் அனைவருக்கும் தெரியவரும்.– என்றார்.





# அக்கரைப்பற்று வீரமாகாளி அம்மன் கும்பாபிஷேக தினத்தில் கலச பவனி

(வடிவேல் டினேஸ்)

அக்கரைப்பற்று அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக குடமுழக்கு திரு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கலச பவனி நேற்று (12) மாலை இடம் பெற்றது.

அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கலசம் தாங்கிய பக்தர்கள் சாகாம வீதி வழியாக கலசத்ததை ஏந்தி சென்று ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

இதன் போது ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், மற்றும் ஆலய தலைவர், செயலாளர் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அன்னையவளின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் (15) இடம் பெறவுள்ளது. அத்துடன் இன்று (13) காலை எண்ணைகாப்பு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

# மலையக மக்களின் வாக்குகள் ரணிலுக்கே!

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

மலையாக மக்கள் பெருவாரியான வாக்குகளை வழங்கி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ராணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற செய்வது என்று தீர்மானித்து விட்டார்கள் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் மஸ்கெலியா நகரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் பங்களிப்புடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முயற்சியால் இன்று தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1350 ரூபாவாக அதிகரிக்கப் பட்டு இருக்கிறது.

எஞ்சிய 350 ரூபாவை எந்த அடிப் படையில் கொடுப்பது என பின்னர் தீர்மானிக்கப்படும் என்ற முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பெருந்தோட்ட பிரதேச மக்களுக்கும் வாழ்வாதாரக் கொடுப்பனவான அஸ்வெசும வழங்கப்பட்டிருக்கிறது.

தோட்டக் குடியிருப்புப் பிரதேசத்தைக் கிராமமாக்கும் முன்மொழிவு பல்வேறு சாதகமான அம்சங்கள் சேர்க்கப்பட்டு பெருந்தோட்ட பிரதேச குடியிருப்பாளர் களின் உடமையாக்கப்படவிருக்கிறது.

கல்வித் துறையிலும் சுகாதார துறையிலும் எதிர்வரும் 5 ஆண்டுகளில் முன்னேற்றகரமான மாற்றங்களை காண முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

பெருந்தோட்ட பிரதேச பாடசாலைகளுக்கு 2500 உதவி ஆசிரியர்களை நியமிக்கும் நடவடிக்கைக்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்றுள்ளதால் அது தற்காலிகமாக தடைப்பட்டிருக் கிறது.

இதற்கான தடையை நீக்கி ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நாங்கள் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறோம்.

நாடு மிகப்பெரும் பொருளாதார சூழ்நிலையில் சிக்கித் தவித்த போதும் மலையக மக்களின் தேவைகளை அணிந்து அதற்கு சரியான நிவாரணங் களை வழங்கிய ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்கவை நாம் மறந்து விட முடியாது.

அத்தியாவசிய அபிவிருத்திகளும், உணவு நிவாரணங்களும் மலையகத் துக்குத் தடையின்றிக் கிடைத்தன. கிடைத்தும் வருகின்றன.

இவ்வாறு கடந்த இரண்டு வருடங் களில் பல்வேறு முன்னேற்றங்களை ஏற்படுத்திக் காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாம் மீண்டும் ஜனாதிபதி ஆக்குவது நமது கடமை யாகும்.

இந்த வரலாற்றுக் கடமையை எதிர்வரும் 21 ஆம் திகதி இந்த நாட்டு மக்களோடு சேர்ந்து மலையக மக்களும் நிறைவேற்றிக் காட்டுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# பலாச்சோலையில் விவசாயிகளின் வயல் பாடசாலையின் அறுவடை!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ரீ.பவிலேகா தலைமையில் பலாச்சோலை கிராமத்தில் விவசாயிகளுக்கான வயல் பாடசாலை அறுவடை விழா நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் மு. பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், இந்த வயல் பாடசாலை திட்டத்தில் பெரிதும் அனுபவம் வாய்ந்த திருகோணமலை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.சர்வேஷ்வரராசா,






மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலக உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சங்கீதா, பிரதி விவசாய பணிப் பாளர் அலுவலக பாடவிதான உத்தி யோகத்தர்கள், தெற்கு வலய விரி வாக்கல் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நஞ்சற்ற இயற்கை வீட்டுத் தோட்டம் தொடர்பான களப் பாடசாலையில் 15 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர் களுக்கான 7 விதமான மரக்கறி பயிர்களின் விதை உட்பட்ட உள்ளீடுகள் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்டன.

தொடர்ந்து 12 வாரங்கள் அவர் களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்க ளால் வழங்கப்பட்டு செய்கை பண்ணப் பட்ட வீட்டுத் தோட்டத்தின் அறுவடை வெற்றிகரமாக நடைபெற்றது.

இதன்போது விவசாயிகளில் கலை நிகழ்ச்சிகளும் அவர்களது திறமை மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அரங்கேற்றப்பட்டன.



# கரையோர பாதுகாப்புடன் தூய்மைப்படுத்தல் நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நோக்குடன் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது, கடல் சூழல் அதிகார சபை மற்றும் "ஜனதாக்சன்" அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வு களுவாஞ்சிகுடி கிராம சேவகர் பிரிவின் கடற்கரையோரங்களை அண்டிய பிரதேசங்களில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் நேற்று (12) இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் கிழக்கு கரையோரங்களை தூய்மையாக பேணுதல் எனும் திட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச பொது மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் கரையோரங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வைப் பிரதேச செயலகக் கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான யோ. நிசந்தராசன் மற்றும் ஆ. ஜெகரூபன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.









# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு நிகழ்வு

(வி.ரி. சகாதேவராஜா)

சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நேற்று நாவிதன்வெளி மத்திய முகாம் ஸ்ரீமுருகன் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து மத்திய முகாம் ஸ்ரீ முருகன் தமிழ் மகா வித்தியாலயத்தில் இவ் விழாவை நடத்தின.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் எஸ்.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சுவாமியின் திருவுருவப் படங்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.

இது பதினைந்தாவது பாடசாலை நிகழ்ச்சி திட்டமாகும்.



# பாராட்டிக் கௌரவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக ஆசிரியர் சேவையாற்றிய ஏ.பேரின்பராசா விவசாயத்துறை போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று உதவி விவசாயப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளமையினை பாராட்டி கௌரவித்து அவருக்கு பிரியா விடையளிக்கும் வைபவம் நேற்று (12) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது உதவி விவசாயப் பணிப்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு பதவி உயர்வு பெற்றுள்ள ஏ.பேரின்பராசா பாடசாலையின் ஆளணியினரால் நினைவுச் சின்னம் மற்றும் நினைவுப் பரிசில்கள் போன்றன வழங்கிக் கௌவிக்கப்பட்டார்.

பாடசாலை நலன்புரி அமைப்பின் மூலம் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வாக்குச் சாவடி அமைக்க வேண்டாம்!

## தவிர்க்கக் கோருகிறார் பாபுசர்மா

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தை, வாக்குச் சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு, இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவிடம் சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திரகுருக்கள் பாபுசர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ கடிதம் ஒன்தை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

நேற்று அனுப்பப்பட்டுள்ள குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்ற உன்னத புருஷரைச் சைவத் தமிழ் உலகம் என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாக ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டது.

பொதுச் செயற்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும் அதன் புனிதத் தன்மையைப் பேணவேண்டும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம், அங்கு புனிதம் பேண வேண்டிய கட்டாயம், ஆன்மிக ஸ்தலமாக அம்மண்டபம் போற்றப்படவேண்டிய தன்மை மற்றும் ஆசாரங்கள் பேணப்பட வேண்டியதன் அவசியம் முதலான இன்னோரன்ன காரணங்களால் கடந்த காலத்து நிர்வாகங்களோடு முரண்பட்டு இன்று வழக்கில் இந்தக் கலாசார மண்டபம் உள்ளது.

தற்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதிக கவனம் எடுத்து இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை



முன்னெடுத்து வரும் நிலையில், தேர்தல் முதலான பொது விடயங்களில் கடமைக்கு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நிச்சயம் அசௌகரியம் ஏற்படும். அது இக்கலாசார மண்டபத்தின் புனிதத்தையும் சட்டதிட்ட நடைமுறைகளையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கும்.

எனவே, தயவுசெய்து இத்தகைய நிலைமையைக் கருத்தில்கொண்டு இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்தும் செயற்பாட்டைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.- என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், யாழ்.மாவட்டச் செயலாளர், யாழ்.பிரதேச செயலாளர, யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



### அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து

# நியமனம் கிடைக்காத ஆசிரியர்கள் கல்வியமைச்சருடன் நேரில் சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை நியமனம் கிடைக்காத ஆசிரியர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று மட்டக்களப்பு கல்லடி தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதன்போது 2018 இல் விண்ணப்பம் கோரப்பட்டு 2019 இல் பரீட்சையில் சித்தியடைந்த தாங்கள் நேர்முக தேர்வை முகம் கொடுத்த போதும் தங்க ளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையா னோர் நியமன பட்டியலில் உள்வாங்கப்படவில்லை என்பது குறித்து கல்வி யமைச்சரிடம் ஆசிரியர்கள் தெளிவு படுத்தி தமக்கான நீதி கிடைக்க வழி செய்யுமாறு கூறினர்.

இந்தச் சந்திப்பில் செயற்றிட்ட அபிவிருத்தி அமைச்சர் அலி ஷாஹிர் மௌலானா, ஆளுனர் நஸீர் அஹமது ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் செயலமர்வு







(நவாஸ்)

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தெளிவுறுத்தும் அம்பாறை மாவட்டத்துக்கான செயலமர்வு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முஹமட் தலைமையில் நேற்று முன்தினம் நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது .

இந்த நிகழ்வின் பங்கு பற்றுனர்களாக உள்ளூராட்சி சபைகளது முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் திட்ட முகாமையாளர் பேரம்பலம் ரேணுகா, வளவாளராக சட்டத்தரணி எம்.எம்.அஸாட் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரை வழங்கினர்.

இதன் போது பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரதிகள் பங்குபற்றியவர்களுக்கு வழங்கப்பட்டன.



## டில்லி முதல்வருக்கு

# பிணை!

## உத்தரவிட்டது டில்லி உச்சநீதிமன்றம்

சி.பி.ஐ. கைது செய்த வழக்கில் டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

டில்லி அரசின் மதுபான கொள்கையில் முறைகேடு நடைபெற்றது என அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது பணமோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவாலை கடந்த மார்ச் 21ஆம் திகதி இரவு அமுலாக்கத்துறை கைது செய்தது. கைது செய்யப்பட்ட கெஜ்ரிவால் திகார் சிறையில் அடைக்கப்பட்டார். அதேவேளை, டில்லி மதுபான கொள்ளையில் ஊழல் நடைபெற்றது என கெஜ்ரிவால் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. மேலும், சிறையிலிருந்த கெஜ்ரிவாலை ஊழல் வழக்கில் ஜுன் 26ஆம் திகதி சி.பி.ஐ. கைது செய்தது.

திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரவிந்த் கெஜ்ரிவால் தமக்கு பிணை வழங்கக்கோரி டில்லி கீழமை நீதிமன்றம், டில்லி உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றில் மனுத் தாக்கல் செய்து வந்தார். இதில், அமுலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் கடந்த மாதம் 12ஆம் திகதி பிணை வழங்கியது. ஆனாலும், சி.பி.ஐ. பதிவு செய்த வழக்கில் அவர் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.


அதேவேளை, சி.பி.ஐ பதிவு செய்துள்ள வழக்கில் தமக்கு இடைக்கால பிணை வழங்கக்கோரி கெஜ்ரிவால் டில்லி உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் கெஜ்ரிவாலுக்கு இடைக்காலப் பிணை வழங்க மறுத்துவிட்டது.

இதையடுத்து, சி.பி.ஐ. வழக்கில் தமக்கு இடைக்கால பிணை வழங்கக் கோரி கெஜ்ரிவால் உச்சநீதிமன்றில் மேல் முறையீடு செய்தார். வைத்திய காரணங்களைக் கருத்தில் கொண்டு தமக்கு இடைக்கால பிணை வழங்கக் கோரி கெஜ்ரிவால் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு கடந்த மாதம் 14ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது இடைக்கால பிணை வழங்க உச்சநீதிமன்றம் மறுப்புத் தெரிவித்ததோடு, கெஜ்ரிவாலின் இடைக்கால பிணை மனுவுக்குப் பதில் அளிக்கும்படி சி.பி.ஐ.க்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது.

இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை மீண்டும் கடந்த 5ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது கெஜ்ரிவாலுக்கு பிணை வழங்க சி.பி.ஐ. தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்தனர். இதனைத் தொடர்ந்து இந்த வழக்கின் தீர்ப்பு இன்று (வெள்ளிக்கிழமை) வழங்கப்படும் என உச்சநீதிமன்ற இணையதளத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இடைக்கால பிணை வழங்கக்கோரி கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் சூர்ய காந்த் மற்றும் உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கெஜ்ரிவாலை கைது செய்ததில் குற்றவியல் நடைமுறை சட்டங்கள் முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளன என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இதையடுத்து, ரூ. 10 இலட்சம் பிணைத்தொகை கட்ட வேண்டும் என்றும் வழக்குத் தொடர்பாக பொதுத்தளத்தில் பேசக்கூடாது என்றும் நிபந்தனைகளுடன் சி.பி.ஐ. கைது செய்த வழக்கில் கெஜ்ரிவாலுக்கு பிணை அனுமதி வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.



# பரபரப்பு!

## அணு ஆயுதம் தயாரிப்புக்கான யுரேனியம் செறிவூட்டல் இடத்தை வெளியிட்டது வடகொரியா

அணு ஆயுதம் தயாரிக்க பெரிதும் உதவும் யுரேனியம் செறிவூட்டல் இடத்தை வடகொரியா வெளியிட்டுள்ளமை உலகளவில் பேசு பொருளாக மாறியுள்ளது.

உலகின் வல்லரசு நாடாகத் திகழும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு வடகொரியா கடும் சவாலாக விளங்கி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் அணு ஆயுதம்தான். எப்போதெல்லாம் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா கொரிய தீபகற்பத்தில் போர்ப்பயிற்சி மேற்கொள்கிறதோ, அப்போதெல்லாம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைச் சோதனை செய்து பதிலடி கொடுப்போம் என வடகொரியா அச்சுறுத்தும்.

அமெரிக்காவின் மையப்பகுதியை சென்று தாக்கும் அளவிற்கு தங்களிடம் அணு ஆயுதம் உள்ளது என வடகொரியா சொல்லி வருகிறது. எங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டமாட்டோம் என வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சமீபத்தில் அணுஆயுதம் தயாரிப்பதற்கான யுரேனியம் செறிவூட்டல் பணிகளை இன்னும் துரிதப்படுத்துமாறு கிம் ஜாங் உன் வலியுறுத்திருந்தார். இது வழக்கம் போல் கிம் ஜாங் உன்னின் மிரட்டலாக இருக்கும் என உலக நாடுகள் நினைத்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில் யுரேனியம் செறிவூட்டல் அதிக அளவில் உற்பத்தி செய்யும் வசதிகளை வடகொரிய அதிபர் பார்வையிடுவது போன்ற படம் வெளியாகியுள்ளது.

யுரேனியம் செறிவூட்டல் மையத்திற்கு எப்போது சென்றார் என்பது உறுதியாகவில்லை. எனினும் வடகொரியா அணு ஆயுதங்களை அதிக அளவில் பெருக்குவதில் உறுதியாக உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

வடகொரியாவின் தற்பாகாப்பிற்கான அணு ஆயுதங்களை அதிகரிக்க வேண்டும் என்பதால், யுரேனியம் செறிவூட்டலை – வசதிகளை அதிகரிக்க கிம் ஜாங் உடன் வலியுறுத்தியுள்ளார். இதன் தொடர்ச்சியாகவே அந்த இடங்களுக்குச் சென்றுள்ளார் எனத் தகவல் கூறப்படுகிறது.

2006ஆம் ஆண்டு முதன்முறையாக வடகொரியா அணுஆயுத சோதனை மேற்கொண்டது. அப்போது ஐ.நா. வடகொரியாவுக்குத் தடை விதித்தது. அதன்பின் தற்போது யுரேனியம் செறிவூட்டல் வசதியை வடகொரியா வெளியிட்டுள்ளது.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்கத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்த இந்தப் படத்தை பதிவிட்டிருக்கலாம். வரவிருக்கும் அமெரிக்க அரசு வடகொரியாவை அணு ஆயுதமற்ற நாடாக்குவது சாத்தியமற்றது என்பதை உணர வைக்க இப்படிச் செய்திருக்கலாம் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 06

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 13/09/2024

## கார்பன் வரி குறித்து முதல்வர் எபி கருத்து

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 13

மாகாணத்தில் கார்பன் வரியை வைத்திருக்க வேண்டும் என்ற மத்திய அரசாங்கத்தின் 'சட்டப் பின்னடைவு' 02▶



# லிபரல் அரசாங்கத்தை வீழ்த்த கன்சர்வேட்டிவ் கட்சி மும்முரம்

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 13**

**லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பை கட்டாயப் படுத்த கன்சர்வேட்டிவ் கட்சி உறுதியளித் துள்ளது.**

**லிபரல் அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து விலத்தி தேர்தலைத் தூண்டு வதற்கு முயற்சிக்க உள்ளதாக கன்சர் வேட்டிவ் தலைவர் பியர் பொய்லியேவ் தெரிவித்துள்ளார்.**

**லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பில் உதவ ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் அவர் அழைப்பு விடுத்தார்.**

லிபரல் கட்சியுடனான நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறு வதாக புதிய ஜனநாயகக் கட்சி கடந்த வாரம் அறிவித்தது.

இந்த நிலையில் சிறுபான்மை லிப ரல் அரசாங்கத்தின் ஆட்சி காலம் குறித்து கேள்வி எழுந்துள்ளது.

சிறுபான்மை லிபரல் அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு, புதிய ஜனநாயகக் கட்சி, புளொக் கியூபெக்குவா கட்சிக ளின் ஆதரவு கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தேவை என்பது குறிப்பிட்டத்தக்கது.

கன்சர்வேட்டிவ் கட்சி 119 நாடா ளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள் ளது.

ஜஸ்டின் ட்ரூடோவின் 154 நாடாளு மன்ற உறுப்பினர்களின் அரசாங்கத் தைத் தக்க வைப்பதற்கு அவர்களுக்கு 24 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை வாக்கெடுப்பில் தேவையாகிறது.

புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு குறித்து கேள்வி எழுந்துள்ள நிலை யில், 32 நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் புளொக் கியூபெக்குவா அதிகார சமநிலையை கொண்டுள் ளது.

# புகலிடம் கோருவோரை மாகாணங்களில் சமமாகப் பங்கிட்டு மீள்குடியேற்றுவதா?

## லிபரல் அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு எதிர்ப்பு

நியூபிரன்ஸ்விக்,செப்ரம்பர்13

கனடா முழுவதிலும் உள்ள மாகாண முதல்வர்கள், நாடு முழுவதும் புகலிடக் கோரிக்கையாளர்களை மிகவும் சமமான முறையில் மீள்குடியேற்றுவதன் மூலம் கியூபெக் மற்றும் ஒன்றாரியோ மீதான குடியேற்ற அழுத்தத்தைத் தணிக்கும் மத்திய லிபரல் அரசாங்கத்தின் முன்மொழிவை விமர்சித்து வருகின்றனர்.

4,600 புகலிடக்கோரிக்கையாளர்களை நிதி உதவி வழங்காமல் எடுத்துக்கொள்ள மத்திய அரசாங்கம் முன் மொழிகிறது என்று நியூ பிரன்சுவிக் பிரீமியர் 02▶



# புலம்பெயர்ந்த இந்தியர்கள் படையெடுப்பு கனேடிய எல்லை ஊடாக அமெரிக்காவுக்கு!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 13

கனடிய எல்லையில் புலம்பெயர்ந்தவர்களை அதிக எண்ணிக்கையில் எதிர்கொள்வதாக அமெரிக்க எல்லைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒக்டோபர் 2023 முதல் இந்த ஆண்டு ஜூலை வரை கனடா-அமெரிக்க எல்லையில் புலம்பெயர்ந்தவர்களை அதிக எண்ணிக்கையில் எதிர்கொள்வதாக அமெரிக்க சுங்க, எல்லைப் பாதுகாப்பு பிரிவு கூறுகிறது.

அமெரிக்கத் தேர்தலில் சட்டவிரோத குடியேற்றம் குறித்த விவாதம் மேலெழுந்துள்ள நிலையில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்திற்கு இது ஒரு சவாலாக மாறலாம் என் நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஒக்டோபர் 2023 முதல் ஜூலை 2024 வரையில் கனடிய எல்லையில் 19,498 புலம்பெயர்ந்தோரை எதிர்கொண்டதாக அமெரிக்க எல்லைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 15,612 பேர், கனடாவின் கியூபெக் மாகாணத்திற்கும் அமெரிக்காவின் நியூயோர்க், வேர்மொன்ட் மாநிலங்களுக்கு இடையிலான எல்லையில் எதிர்கொள்ளப்பட்டனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முந்தைய ஆண்டு, கனடிய அமெரிக்க எல்லையில் 2,238 புலம்பெயர்ந்தவர்களை மட்டுமே எதிர்கொண்டனர் என அமெரிக்க எல்லைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனடா-அமெரிக்க எல்லையில் அதிக எண்ணிக்கையிலான எதிர்கொள்ளப்படும் புலம்பெயர்ந்தவர்கள் இந்திய வம்சாவளியினர் என தெரியவருகிறது.



ஒக்டோபர் 2023 முதல் ஜூலை 2024 வரையில் எதிர்கொள்ளப்பட்ட 19,498 புலம்பெயர்ந்தவர்களில் 9,742 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

ஒழுங்கமைக்கப்பட்ட நாடு கடத்தல் குழுக்கள் மென்மையான கனடிய எல்லைக் குடியேற்ற விதிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

## புகலிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிளேன் ஹிக்ஸ் தெரிவித்தமையைத் தொடர்ந்து இந்த விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மாகாணத்தில் தற்காலிக குடியேற்ற வாசிகளின், குறிப்பாக புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க, கியூபெக்கிலிருந்து மத்திய அரசாங்கம் பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், கியூபெக்கில் தற்காலிகமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை 300,000 இலிருந்து 600,000 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது என்று கியூபெக் முதல்வர் கூறியுள்ளார்.

ஒன்றாரியோ, அந்த மாகாணத்தில் அகதிகளாக வரக்கூடியவர்களின் எண்ணிக்கையில் ஏற்றத்தாழ்வுகளை மேற்கோள் காட்டி, மத்திய அரசாங்கத்தை உதவிக்கு அழைத்துள்ளது.

புதன்கிழமை பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடைபெற்ற ஆளும் லிபரல் நாடாளுமன்ற கூட்டத்திற்குப் பிறகு பேசிய மத்திய குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர், ஹிக்ஸின் கருத்துக்களை 'மிகவும் பொறுப்பற்றவை' என்று குறிப்பிட்டார்.



## கார்பன் வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றப்பட்டால், நுகர்வோர் மீதான மாகாண கார்பன் வரியை தமது அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவரும் என பிரிட்டிஷ் கொலம்பிய முதல்வர் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றம் ஓர் உண்மையான மற்றும் தற்போதைய அச்சுறுத்தல் என்று நம்புவதால், அதிக சுற்றுச்சூழல் மாசினை ஏற்படுத்துபவர்களிடம் இருந்து நியாயமான முறையில் அதற்கான கட்டணம் அறவிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வான்கூவரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட போதே அவர் இந்த விடயங்களை முன்வைத்தார்.

மத்திய லிபரல் அரசாங்கத்தின் கார்பன் வரிவிதிப்பு அணுகுமுறை 'மோசமாக சேதமடைந்துள்ளது' என்று அவர் கூறினார், அக்டோபர் 19 அன்று பிரிட்டிஷ் கொலம்பியாவில் தேர்தல் நடைபெறவுள்ளது.



# கிங்ஸ்டனில் இடம்பெற்ற தாக்குதலில் இருவர் பலி; ஒருவருக்குப் படுகாயம்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 13

கிங்ஸ்டன் நகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தமையுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

கிங்ஸ்டனில் உள்ள முகாம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

இறந்த இருவர் ஆண்கள் எனவும் காயமடைந்தவர் பெண் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்களும் சந்தேக நபர்களும் ஒருவரையொருவர் அறிந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

“கூர் முனை ஆயுதம் மற்றும் மழுங்கிய கருவியால் ஏற்பட்ட உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.”

“பாதிக்கப்பட்டவர்களில் இருவர் காயங்களால் உயிரிழந்துள்ளனர். மூன்றாவது நபர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனையில் உள்ளார்” - என்று பொலிஸார்

சந்தேக நபர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

இந்த சம்பவம் குறித்து கிங்ஸ்;டன் நகர முதல்வர் பிறயன் பெட்டர்சன் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

# பொருளாதார வளர்ச்சி போதுமானது அல்ல; வறுமை நிலைக்குச் செல்கின்றதா கனடா?



உலகின் செல்வந்த நாடுகளின் பட்டியலில் கனடா உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும் உலகின் ஏனைய செல்வந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது அண்மைக்காலமாக கனடா செல்வந்த நிலையில் இருந்து வீழ்ச்சி அடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது கடந்த காலத்தில் கனடா இருந்த வலுவான செல்வந்த நிலையில் இருந்து பின்னடைவை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவிற்கும் அமெரிக்காவுக்கும் இடையில் செல்வந்த நிலை தொடர்பான இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனத்தொகை வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்யும் போது கனடாவின் பொருளாதார வளர்ச்சி மந்தகதியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக செல்வந்த நாடுகளில் கனடாவின் பொருளாதார வளர்ச்சி நிலைமை போதுமானது அல்ல என தெரிவிக்கப்படுகிறது.



# நீர்த் துப்பாக்கியினால் தண்ணீரை பீய்ச்சி அடித்த பெண் மீது வழக்கு

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் வோட்டர் கன் (Water gun) அல்லது நீர் விளையாட்டு நீர்த்துப்பாக்கியால் தண்ணீர் பீய்ச்சி அடித்த சம்பவம் தொடர்பில் குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சிம்கோ பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு எதிராக இவ்வாறு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு உள்ளது.

அண்மையில் நடைபெற்ற லேபர் டே நிகழ்வுகளின் போது இந்தப் பெண் அண்டை வீட்டு சிறுவர்களுடன் கூடி விளையாடியுள்ளார்.

இதன்போது வாட்டர் கன் ஒன்றை எடுத்துக்கொண்டு சிறுவர்களை துரத்திச் சென்றபோது இடையில் அண்டை வீட்டுக்காரர் ஒருவரின் மீது நீர்த்துப்பார்க்கியிலிருந்து நீர் பாய்ச்சியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தினால் ஆத்திரமுற்ற நபர் உடனடியாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பெண் மீதுவர் குற்றம் சுமத்தியுள்ளார். இது தற்செயலாக இடம் பெற்ற சம்பவம் என 58 வயதான வென்டி வாஸிக் என்ற பெண் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த சம்பவம் தொடர்பில் தான், குறித்த அயலவரிடம் பலமுறை மன்னிப்பு கேட்ட போதிலும் அவர் அதனை ஏற்றுக் கொள்ளாது கூச்சலிட்டு பொலிஸாருக்கு அறிவித்தார் என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை பொலிஸாருக்குத் தெளிவுபடுத்திய போதிலும் பொலிஸார் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறு ஒரு சம்பவத்திற்கு குற்றவியல் அடிப்படையில் விசாரணை நடத்துவதானது வளங்களை விரயமாக்கக்கூடிய செயல்பாடு என விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்கரி புயல் காற்று சேதம் 2.8 பில்லியன் டொலர்கள்



கல்கரியில் புயல் காற்று காரணமாக 2.8 பில்லியன் டொலர் நஷ்ட ஈட்டுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கல்கரியில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஏற்பட்ட புயல் காற்று காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்காக இவ்வாறு 2.8 பில்லியன் டொலர்கள் நட்டஈடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கனடிய வரலாற்றில் பதிவான இரண்டாவது மிகப் பெரிய இயற்கை அனர்த்தம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய காப்புறுதி நிறுவனம் இது தொடர்பிலான தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி புயல் காற்று, மழை வெள்ளம், கடும் மழை என்பவற்றினால் கல்கரி நகரம் பாதிக்கப்பட்டது.

இதனால் பெரும் எண்ணிக்கையிலான வீடுகள் சேதமடைந்திருந்தன. சுமார் 20 வீதமான வீடுகள் சேதமடைந்து இருந்தன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமாக புயல் காற்று சீற்றத்தினால் சேதங்களை எதிர் நோக்கிய 1,30,000 பேர் காப்புறுதி இழப்பீடுகளுக்காக விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் மொத்தமாக 2.8 பில்லியன் டொலர் நட்டஈட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.




# இன வெறி அடிப்படையில் செயற்பட்ட ஒருவர் கைது

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் இன வெறி அடிப்படையில் செயற்பட்ட ஒருவரை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

டிடிசி பஸ்ஸில் கடந்த மாதம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. 33 வயதான நபர் ஒருவரை பொலிஸார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

கருப்பின நிறவெறி அடிப்படையில் குறித்த நபர் நடந்து கொண்டார் எனவும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

டிடிசி பஸ்ஸில் பயணம் செய்த போது இந்நபர் சக பயணி ஒருவரிடம் இவ்வாறு இனக்குரோத அடிப்படையில் மோசமாகச் செய்யப்பட்டார் ர்ன்ச்வும், மர்ம பொருள் ஒன்றை பீய்ச்சி அடித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

எனினும், பொலிஸார் நடத்திய விசாரணைகளை தொடர்ந்து அவரைக் கைது செய்துள்ளனர். வெறுப்புணர்வு சம்பவமாக இந்த சம்பவம் பதியப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 17 நாளான சிசுவைக் கொன்ற தந்தைக்கு 6 ஆண்டுகள் சிறை



கனடாவின் எட்மாண்டன் பகுதியில் 17 நாள்களேயான சிசுவைக் கொலை செய்த அந்த சிசுவின் தந்தைக்கு நீதிமன்றம் 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

வெறும் 17 நாள்களேயான ஆண் குழந்தையை இந்த நபர் கொலை செய்துள்ளார் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

34 வயதான பிளேயர் ஜான்சன் என்ற நபர் இந்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டுள்ளார்.

மிகக் கொடூரமான முறையில் சிசுவைத் தாம் தாக்கினார் என அவர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டு உள்ளார். சிசுவின் தலையை கதவில் மோதச் செய்து, தனது முழங்காலால் சிசுவின் தலையை தாக்கி பின்னர் தரையில் வீசி எறிந்தார் என அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஆரம்பத்தில் நாய் ஒன்று கட்டிலில் பாய்ந்ததால் சிசு உயிரிழந்து விட்டதாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

எனினும், விசாரணைகளின் மூலம் கொடூரமான தாக்குதலில் சிசு கொல்லப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் குற்றச் செயல்களில் அவட் ஈடுபடவில்லை என்ற காரணத்தினால் ஆறு ஆண்டுகள் தண்டனைவருக்கி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# அனுமதியின்றி சீக்கிய வயோதிபரின் தாடியை சவரம் செய்த மருத்துவ ஊழியரினால் சர்ச்சை

கனடா மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த சீக்கியர் ஒருவரின் அனுமதியின்றி அவரது தாடி சவரம் செய்யப்பட்ட விவகாரம் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கனடாவின் பிராம்ப்டனில் அமைந்துள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்துள்ளார், ஜோஹிந்தர் சிங் (வயது 85).

ஜோஹிந்தர் சீக்கிய கொள்கைகளை கடுமையாக பின்பற்றும் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். சீக்கியர்களின் கொள்கைகளில் ஒன்று தங்கள் தாடியை அவர்கள் மழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால், அவர் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனை ஊழியர்கள் ஜோஹிந்தரின் தாடியை மழித்துள்ளார்கள்.

அவர் சுயநினைவின்றி இருந்ததால் அவர்கள் அவரிடம் அனுமதி கோரியிருக்க வாய்ப்பில்லை. அவருடைய உறவினர்களிடமும் யாரும் அனுமதி கோரவில்லையாம்.

ஆக, அனுமதியின்றி ஜோஹிந்தரின் தாடியைச் சவரம் செய்ததால் சீக்கிய சமுதாய அமைப்பினர் வருத்தமடைந்துள்ளார்கள்.

இது கலாச்சார விதி மீறல் என சீக்கிய அமைப்புகள் கூறியுள்ள நிலையில், அது தொடர்பாக முழுமையான மீளாய்வு ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக சம்பந்தப்பட்ட மருத்துவமனை தெரிவித்துள்ளது.

# மீன் வலையில் நீண்ட காலம் சிக்கித் தவித்த திமிங்கலம் 4 நாள்கள் முயற்சியில் விடுவிப்பு



கனடாவில் வலையில் நீண்ட காலம் சிக்கித் தவித்ததாகக் கருதப்படும் திமிங்கலம் நான்கு நாள்கள் நடந்த மீட்பு பணிகளுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா கடற்கரையில் மீன் வலையில் சிக்கிய ஹம்ப்பேக் திமிங்கலம் ஒன்று நீண்ட போராட்டத்திற்கு பிறகு விடுவிக்கப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட மீன் வலைக் கயிறுகள் வெட்டி எடுக்கப்பட்ட பிறகு சுமார் 11மீற்றர் (36 அடி) நீளம் கொண்ட ஹம்ப்பேக் திமிங்கலம் பாதுகாப்பாக விடுவிக்கப்பட்டது.

4 நாள்கள் நடந்த மீட்பு நடவடிக்கைக்குப் பிறகு திமிங்கலம் பத்திரமாக விடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகளின் தகவல் தெரிவித்துள்ளனர்.

மேலும் கனடாவின் மீன்வளம் மற்றும் பெருங்கடல்களின் கடல் பாலூட்டி ஒருங்கிணைப்பாளர் தகவல் படி, பாதிக்கப்பட்ட திமிங்கலம் பல மாதங்களாக மீன் வலையில் சிக்கி கொண்டு இருந்து இருக்கலாம் என்றும், யாரும் கவனிக்காமல் இருந்து இருந்தால் திமிங்கலம் சோகமான முடிவை எதிர் கொண்டு இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.